


23.07.2024

**தலைப்புச் செய்திகள்**

1. மக்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 4 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்களின் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக 2 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

2. தொழில் உற்பத்தி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெறும் முதல்முறை ஊழியர்களுக்கு ஒருமாத ஊதியம் 3 தவணைகளாக அவர்களின் வங்கி கணக்குகளில் செலுத்தப்படும்

3. தனிநபருக்கான நிலையான வருமான வரி விலக்கு 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

4. தங்கம், வெள்ளிக்கு 6 சதவிகிதமும், கைபேசிகளுக்கு 15 சதவிகிதமும் சுங்கவரி குறைக்கப் பட்டுள்ளது.

5. அனைத்து தரப்பினரின் வளர்ச்சியை பட்ஜெட் உறுதி செய்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

6. தமிழ்நாட்டில் வர்த்தக மையங்களில் தமிழ்மொழியில் பெயர் பலகை இடம்பெற வணிகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

**இனி விரிவான செய்திகள்**

**பட்ஜெட்**

நாட்டில் 4 கோடிக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக 2 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அறிவித்துள்ளார்.

2024-25ம் நிதியாண்டிற்கான மத்திய அரசின் பொது பட்ஜெட்டை மக்களவையில் இன்று தாக்கல் செய்து அமைச்சர் உரையாற்றினார்.

வருமான வரி செலுத்துவோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், மாத ஊதியம் பெறுவோருக்கான வருமான வரி விலக்கு 50 ஆயிரம் ரூபாயிலிருந்து 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப் படுவதாக அமைச்சர் தெரிவித்தார்

புதிய வருமான வரி விகிதத்தில் மாற்றங்களை அறிவித்துள்ள அவர், இதன்படி ஆண்டிற்கு 3 லட்சம் வரை வருமானம் பெறுபவர்களுக்கு வருமான வரி இல்லை என்று கூறினார்.

3 லட்சம் முதல் 7 லட்சம் ரூபாய் வருமானம் பெறுவோருக்கு, 5 சதவிகித வரியும்,

7 லட்சம் முதல் 10 லட்சம் ரூபாய் வருமானம் பெறுவோர் 10 சதவிகித வரியும்,

10 லட்சம் முதல் 12 லட்சம் ரூபாய் வருமானம் பெறுவோர் 15 சதவிகித வரியும்,

12 லட்சம் முதல் 15 லட்சம் வரை பெறுவோர் 20 சதவிகித வரியும்,

15 லட்சத்திற்கும் மேற்பட்ட வருமான பிரிவினருக்கு 30 சதவிகித வரியும் விதிக்கப்படுவதாக அமைச்சர் குறிப்பிட்டார்

**சரக்கு சேவை வரி முறை மேலும்** எளிதாக்கப்படும்,

தங்கம், வெள்ளி மீதான சுங்க வரி 6 சதவிகிதமும்,

பிளாட்டினம் மீதான சுங்க வரி 6.4 சதவிகிதமும் குறைக்கப்படுவதாக அறிவித்தார்.

கைப்பேசி மற்றும் அது தொடர்பான இதர சாதனங்கள் மீதான சுங்க வரி 15 சதவிகிதம் குறைக்கப்படுகிறது என்றார்.

**புற்றுநோய்க்கான 3 முக்கிய மருந்துகளுக்கு** சுங்க வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுவதாக அவர் கூறினார்.

லித்தியம், காப்பர், கோபால்ட் உள்ளிட்ட 20 வகையான கனிமங்கள் மீதான சுங்கவரி குறைக்கப்படுவதாக அறிவித்தார்.

இணைய வர்த்தகத்திற்கான **வுனுளு** வரி ஒரு சதவிகிதமாக குறைப்பு,

அறக்கட்டளைகளுக்கான வரி விதிப்பு இனி ஒரே முறையாக தொடரும்.

தாமதமான வருமான வரி தாக்கல் செய்வது இனி கிரிமினல் குற்றமாக கருதப்பட மாட்டாது,

வெளிநாட்டு நிறுவனங்களுக்கான கார்ப்பரேட் வரி 40 சதவிகிதத்திலிருந்து 35 சதவிகிதமாக குறைப்பு ஆன்லைன் வர்த்தகத்திற்கும் வரி குறைக்கப் படும் போன்ற அறிவிப்புகளையும் அவர் வெளியிட்டார்

**குறிப்பிட்ட நிதி சொத்துக்களுக்கான முதலீட்டு** லாபம் பெறுவதற்கான வரி விலக்கிற்கு உச்ச வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ஒருலட்சத்து 25 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்படுகிறது.

ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்குவதை இலகுவாக்க அனைத்து தரப்பு முதலீட்டாளர்களுக்கும் ஏஞ்சல் வரி முற்றிலும் நீக்கப்படுகிறது,

**எதிர்கால பாதுகாப்பு பரிவர்த்தனை வரி மற்றும்** பாதுகாப்பு தெறிவிற்கான வரி விகிதங்கள் 0.02 மற்றும் 0.01 சதவிகிதமாக அதிகரிக்கப்படும்,

**நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியில் 4.9** சதவிகித நிதி பற்றாக்குறை பட்ஜெட்டில் காட்டப்பட்டுள்ளது.

11 லட்சத்து 11 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மூலதன வருவாய்க்கு வகை செய்யப்பட்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கையால் கட்டமைப்பு துறை வளர்ச்சிபெறும் என்று நிதியமைச்சர் கூறினார்.

**பொருளாதார தேக்க நிலைக்கு மத்தியிலும்** இந்தியா வேகமான பொருளாதார வளர்ச்சியுடன் முன்னேற்றப்பாதையில் செல்வதாக கூறியஅவர், அனைவருக்கும் வளர்ச்சிக்கான இலக்குகள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

வேளாண்மை, வேலைவாய்ப்பு மற்றும் திறன் வளர்ப்பு, மனிதவள மேம்பாடு, சமூக நீதி, உற்பத்தி சேவை, நகர்ப்புற வளர்ச்சி, எரிசக்தி பாதுகாப்பு, கட்டமைப்பு, படைப்புத்திறன், ஆராய்ச்சி மேம்பாடு, அடுத்த தலைமுறைக்கான சீர்த்திருத்தங்கள் பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

.. **வாய்ஸ் (9)..**

வேளாண்மை மற்றும் அதுதொடர்பான பிரிவுகளுக்கு ஒருலட்சத்து 52 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்,

400 மாவட்டங்களில் வேளாண்மையில் டிஜிட்டல் பொது கட்டமைப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்,

ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக தேசிய கூட்டுறவு கொள்கை கொண்டுவரப்படும்,

2 கோடியே 10 லட்சம் இளைஞர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு தொழில் உற்பத்தி துறைகளில் புதிதாக பணியில் சேர்ந்து ஒருலட்சம் ரூபாய் வரை மாத ஊதியம் பெறும் இளையோருக்கு அரசு ஒருமாத ஊதியத்தை வழங்கும்,

இதன்படி வருங்கால வைப்பு நிதி திட்டத்தின் கீழ் பதிவுசெய்வோருக்கு 3 தவணைகளாக 15 ஆயிரம் ரூபாய் அவர்தம் வங்கி கணக்குளில் நேரடியாக செலுத்தப்படும்

**தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு** அளிப்போருக்கு, கூடுதல் வேலை வாய்ப்பிற்காக வருங்கால வைப்பு நிதியிலிருந்து 2 ஆண்டுகளுக்கு, 3 ஆயிரம் ரூபாய் வரை பெறுவதற்கான வசதி செய்யப்படும்,

20 லட்சம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் போன்ற அமைப்புகளையும் நிதியமைச்சர் வெளியிட்டார்.

**பிரதமரின் கரீப் கல்யாண் யோஜனா திட்டம்** மேலும் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்,

இயற்கை வேளாண்மைக்கு ஆதரவு அளிக்கும் வகையில் 10 ஆயிரம் உயிரி வள மையங்கள் ஏற்படுத்தப்படும்,

வரும் 2 ஆண்டுகளில் 1 கோடி விவசாயிகள் இயற்கை வேளாண்மையை மேற்கொள்ள ஊக்குவிக்கப்படுவார்கள்,

சுய சார்பு பாரத திட்டத்தின் கீழ் பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி அதிகரிப்படும்,

கல்வி மற்றும் வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டிற்கு 1 லட்சத்து 48 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்,

உள்நாட்டு கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயில்வோருக்கு 10 லட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படும்,

ஊரக பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்,

மகளிர் வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் வகையில் மகளிர் தங்கும் விடுதிகள் ஏற்படுத்தப்படும் என்று நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

**பிரதமரின் 2-வது கட்ட நகர்ப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ்** ஏழை, எளியோர் மற்றும் நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் 10 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்,

ஊரக மற்றும் நகர்புற பகுதிகளில் இத்திட்டத்தின் கீழ் 3 கோடி வீடுகள் கூடுதலாக கட்டப்படும்,

மகளிர் தலைமையிலான வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் 3 லட்சம் கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்றும் நிதியமைச்சர் கூறினார்.

**.. வாய்ஸ் (மகளிர்) ..**

பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டின் கீழ் 63 ஆயிரம் கிராமங்கள் கொண்டுவரப்படும்,

இதன்மூலம் 5 லட்சம் பழங்குடியினர் பயன்பெறுவர் என்றும் நிதியமைச்சர் கூறினார்

சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்களின் உற்பத்திக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்,

சிறு குறு தொழில் நிறுவனங்கள் இயந்திரங்கள் வாங்குவதற்கான கடன் உத்திரவாத திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்,

முத்ரா வங்கி கடன் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதித் தொகை 20 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்படும்,

பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் கூடிய மின்னணு வர்த்தக ஏற்றுமதி மையங்கள் உருவாக்கப்படும் என்றார்.

500 முதன்மை தொழில் நிறுவனங்களில் ஒருகோடி இளைஞர்களுக்கு திறன் பயிற்சிக்கான வாய்ப்புகள் உருவாக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ் உதவி தொகையாக மாதந்தோறும் 5 ஆயிரம் ரூபாயும், ஒரு முறை நிதி உதவியாக ஆறாயிரம் ரூபாய் வழங்கப்படும்,

நாட்டில் ஒரு கோடி வீடுகளில் சூரிய மேற்கூரைகள் அமைக்கும் வகையில் பிரதமரின் சூரிய ஒளி திட்டத்தின் கீழ் 300 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்க வகை செய்யப்படும் என்றும் நிதியமைச்சர் கூறினார்.

பிரதமரின் கிராம சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் 4-வது கட்டத்தின் கீழ் 25 ஆயிரம் ஊரக பகுதிகளுக்கு இணைப்பு ஏற்படுத்தப்படும்.

இந்தியாவை உலகளாவிய சுற்றுலா தளமாக மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக கயா, உத்திரபிரதேசத்தில் உள்ள ஆலயங்கள் மேம்படுத்தப்படும்,

அடுத்த தலைமுறையினருக்கான வேலை வாய்ப்பையும், நீடித்த வளர்ச்சியையும் முன்னெடுத்துச் செல்லும் வகையில் விரிவான பொருளாதார கொள்கை உருவாக்கப்படும் என்றும் நிதியமைச்சர் அறிவித்தார்.

ஊக்கத்தொகை திட்டம், கூட்டாண்மை மேம்பாடு, சீர்திருத்தங்கள் ஆகியவற்றை நடைமுறைபடுத்தும் வகையில் 50 ஆண்டு வட்டியில்லா கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்

சிறார்களின் பொருளாதார பாதுகாப்பிற்காக பெற்றோரும், பாதுகாவலர்களையும் உள்ளடக்கிய சேமிப்பு திட்டத்தை அறிவித்துள்ள நிதியமைச்சர் வயது முதிர்ச்சிக்கு பின்னர் இது இயல்பான தேசிய ஓய்வூதிய திட்டமாக மாற்றப்படும் என்றார்.

**பீஹாரில் புதிய விமான நிலையங்கள், மருத்துவ கல்லூரிகள்,** விளையாட்டு கட்டமைப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்படுவதோடு மூலதன முதலீட்டிற்கு கூடுதல் ஒதுக்கீடு வழங்கப்படும்,

அம்மாநிலத்தில் பன்முக வங்கிகள் ஏற்படுத்தப்படும்,

பீஹார் பாசனம் மற்றும் நீர் மேலாண்மை திட்டங்களுக்காக 11 ஆயிரத்து 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

**ஆந்திர மாநில வளர்ச்சிக்காக பன்முக** மேம்பாட்டு முகமை மூலம் சிறப்பு நிதியுதவி வகை செய்யப்படுவதோடு, நடப்பு நிதியாண்டில் 15 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்றார்.

வடகிழக்கு மாகாணங்களில் வங்கி சேவையை விஸ்தரிக்கும் வகையில், 100 தபால் வங்கி கிளைகள் தொடங்கப்படும் என்று கூறினார்.

பொதுதனியார் பங்களிப்புடன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வாடகை வீட்டுவசதி திட்டம் செயல்படுத்தப்படும்,

**நாட்டின் கிழக்கு பகுதிகளில் தொழிற்சாலை** கட்டமைப்பு திட்டம் செயல்படுத்தப்படும்,

**நடுவர் மன்றங்களில் தேங்கி கிடக்கும்** வழக்குகளுக்கு விரைந்து தீர்வுகாண நடவடிக்கைகள் முடுக்கி விடப்படும்,

30 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 14 நகரங்களில் வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்,

**நாட்டின் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 11 லட்சம்** கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்,

**மேக வெடிப்பு மற்றும் நிலச்சரிவுகளால்** பாதிக்கப்பட்ட உத்தரகாண்ட் மற்றும் சிக்கிம் மாநிலங்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு வழங்கப்படும்,

வங்கி திவாலை நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் உள்ளடக்கிய வளர்ச்சியுடன் கூடிய ஒருங்கிணைந்த தொழில் நுட்பத்தளம் உருவாக்கப்படும்,

நிதித்துறை கட்டமைப்பிற்கான தொலைநோக்கு திட்டங்களும், ஆவணங்களும் தயாரிக்கப்படும்,

கிராமப்புற வாராந்திர சந்தைகள் மேம்பாட்டிற்கான புதிய திட்டம் தொடங்கப்படும்,

**தேசிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பான** பிரச்சனைகளை ஆராய சிறப்புக்குழு ஏற்படுத்தப்பட்டு தீர்வு எட்டப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

□□□□□□□

**பட்ஜெட் - கருத்து**

**உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் அனைத்து** தரப்பினரின் மேம்பாடுடன் நாட்டை வளர்ச்சி பாதையில் முன்னெடுத்துச் செல்லும் வகையில் பட்ஜெட் அமைந்துள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் அம்சங்கள் இதில் இடம் பெற்றுள்ளதாக கூறினார்.

**பட்ஜெட் பற்றி கருத்து தெரிவித்த எதிர்கட்சி** தலைவர் திரு. ராகுல் காந்தி காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கையை இது பிரதிபலிப்பதாக கூறினார்

பி.ஜே.பி. கூட்டணி கட்சிகளை திருப்திபடுத்தும் வகையில் பட்ஜெட் இடம்பெற்றிருப்பதாக குறை கூறினார்.

□□□□□□□

**சீதாராம் யெச்சூரி**

வேலை வாய்ப்பின்மை பணவீக்கம் உணவு பண்டங்களின் விலை போன்ற பிரச்சனைகள் குறித்து இந்த பட்ஜெட்டில் உரிய அறிவிப்புகள் வெளியிடப்பட வில்லை என்று மாக்சிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் திரு. சீதாராம் யெச்சூரி தெரிவித்துள்ளார்.

□□□□□□□

**தேசிய ஒலிபரப்பு தினம்**

**தேசிய ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.**

1927ஆம் ஆண்டு இதே நாளில் மும்பையில் தனியார் ஒலிபரப்பு நிறுவனம் மூலம் நாட்டின் முதல் ஒலிபரப்பு சேவை தொடங்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் இத்தினம் கொண்டாடப்படுகிறது.

1936ஆம் ஆண்டு ஜுன் 8 ஆம் தேதி முதல் அகில இந்திய வானொலி என்ற பெயரில் இந்த ஒலிபரப்பு சேவை மத்திய அரசின் கீழ் செயல்பட தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

□□□□□□□□

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் அனைத்து வர்த்தக மையங்களிலும் தமிழில் பெயர் பலகை அமைக்க வணிகர்கள் தாமாக முன்வந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்கள் கூட்டத்தில் பேசிய அவர், கடைகளுக்கான குத்தகை காலம் 12 ஆண்டுகள் என்ற மாற்றம் வரும் ஒன்றாம் தேதி முதல் நடைமுறைப் படுத்தப்படும் என்றார்.

**சென்னை கிண்டி உயர்சிறப்பு மருத்துவமனையில்** நோயாளிகளிடம் சிகிச்சை விவரங்களை அவர் கேட்டறிந்தார்.

□□□□□□□□

**சக்ரபாணி**

**திண்டுக்கல் மாவட்டம் கொழுமம்கொண்டான்** ஊராட்சியில் ஆறேகால் கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைய உள்ள சமத்துவபுரத்திற்கான பூர்வாங்க பணிகள் இன்று தொடங்கின.

இந்நிகழ்ச்சியில் மாநில அமைச்சர் திரு.சக்ரபாணி 114 பயனாளிகளுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

□□□□□□□□

**டென்னிஸ்**

ஆஸ்ட்ரியா ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சுமித் நாகல் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நாளை நடைபெறும் இப்போட்டியில் சுமித்நாகல் - ஸ்பெயினின் **ீநனசழ ஆயசவைநெண** எதிர்கொள்கிறார்.

□□□□□□□□

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

□□□□□□□□